முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1253

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.03.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானபலமே அரங்கா வாழ்க
ஞானியாக வாழும் தேசிகா வாழ்க
தானதர்ம அடையாளம் கொண்டு
தரணியையே தருமலோகமாக்குகின்ற குருராஜனே வாழ்க
2. வாழ்க எனவாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மாசி மாதம் 21ம் நாள், 05.03.2023, ஞாயிற்றுக்கிழமை)
ஊழ்போக்கும் கலியுகத்தின் மகாதவசி நீ
உலகையே மாற்றும் அவதார மகா யோகிநீ
3. வகைபட உன்னை உலகோர் அடையாளங்காண
வரம் முழுமைபட கண்டு ஞானியாவர்
மண்ணுலகில் உன்அவதாரத்தை அறிந்த மக்களெல்லாம்
மரணத்தையே வென்று பிறவா பெரும்பேறுகாண்பர்
4. காணவே மகா அற்புதத்தை
கலியினில் தர்மத்தை கொண்டு நடத்துகின்ற
சண்முகனார் என்அவதார ஞானிநீ
சற்குரு எனஉன்னை ஏற்று சரணடைபவர்க்கு
5. அடைபவர்க்கு கலியினில் பங்கமில்லை
அடைபவர்க்கு கலியினால் துன்பமுமில்லை
தடையற உன்மார்க்கத்தை ஏற்று தர்மத்தை கையில் எடுத்தவர்க்கு
தரணியிலே சத்ரு ருணரோக துன்பமும் இல்லை
6. இல்லையப்பா எந்த சக்தியாலும் இடர்பாடுகள்
இல்லையப்பா எந்த சூட்சும வழியிலும் சோடைகள் பற்றாமல்
பற்றாது பெரும்பாதுகாப்பாய் பாருலகில் அரங்கன் உன் சக்தி
உற்றதொரு குருவே என நம்பி வருபவர்க்கு உயர்வான பலம் தந்து காத்தருளும்
7. அருளாக அறமாக அனைத்துமாக
இந்த லோகத்தை வழிநடத்தும்
அற்புதத்தை ஆக்கத்தை ஆறுமுகன் யான்
உமக்கு நித்தம்நித்தம் சக்தியாக வழங்கி வருகின்றேன்
8. வருகவே உன்னை உணர்ந்து தெளிந்து
வையகத்தில் உன்பலம் சூட்சுமமாய் அறிந்து அதன்வழி நடந்து
நடந்துவருபவர்க்கு ஞானம் சித்திக்கும்
நம்பிக்கைவழி சலனம் கொண்டவர்க்கு

9. இடர்கள் சில பின்னடைவாக அனுகக்கூடும்
அன்னதனால் உலகோர் அரங்கன்மேல் அளவில்லா பற்றுவைக்க
சண்முகனார் எனை அரங்கன் வழி காணும்
சர்வ சூட்சுமம் விளங்கும் விளங்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–